# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,287 — 1922 ம் ௵ ஐப்பசிமீ 6 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### தேசாதிபதியவர்களின் விளம்பரம்.

1910 ம் ஆண்டின் நகரசங்கச் சட்டத்தின் 109 (1) ம் பிரிவின் நிருவாகமாக 1906 ம் ௵ மார்கழிமாசம் 18 ந் தேதி விளம்பரிக்கப்பட்ட உப சட்டங்களின் 7 ம் அத்தியாயத்திலுள்ள 100 ம் இலக்க உபசட்டத்தை கண்டி நகரச்சங்கம் திருத்தஞ்செய்து அதன் இடத்து அடியிற்காணும் அட்டவணையின் கீழ்வரைந்துள்ள உபசட்டத்தை ஏற்படுத்தியும், அப்படி ஏற்பாடாகிய உபசட்டத்தை குறித்த சட்டத்தின் 109 (3) ம் பிரிவின் அமைப்புப்படி அதிகாரமந்திரசபையோடு கூடிய தேசாதிபதி அவர்கள் ஸ்திரப்படுத்தி யிருப்பதால் :

இத்தாற் சகலரும் அறியவேண்டியது தேசாதிபதியாகிய நாங்கள் குறித்த சட்டத்தின் 109 (3) ம் பிரிவினுல் எங்கள் மீது பொறுப்பித்ததாயிருக்கும் தத்துவத்தின் முறைப்படி இத்தால் 100 ம் இலக்க உபசட்டத்தின் திருத்தத்தை விளம்பரம்பண்ணுகிறோம்.

எங்கள் ஆண்டவரின் வருடம் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்திரண்டாம் வருடம் செப்தம்பர்மாசம் இருபத்தொன்பதாந் தேதியில் மேற்சொல்லிய இலங்கைத் தீவிலுள்ள கொழும்பிற் கொடுக்கப்பெற்றது.

உத்தமனுர் கட்டளைப்படி,
பி. ஹோர்ஸ்பரோ,
பிரதி கொலோனியல் சக்கிறுத்தார்.

ஆண்டவர் எங்கள் அரசரை காப்பாராக.

---

அட்டவணை. VII. ம் அதிகாரம்.

100. நகரசங்க இறைச்சிஅடி வீட்டிலிருந்தாயினும் அல்லது இறைச்சி அடிக்கும் வேறெந்த இடத்திலிருந்தாயினும் சந்தை ("மாக்கற்") க் காயினும் அல்லது நகரசங்க ஆதிக்க எல்லைகட்குள் உள்ள வேறெந்த இடத்துக்காயினும் இருபது இருத்தல் நிறைக்கு அதிகமான எந்த நிறையுள்ள எந்த மிருக இறைச்சியையும், சூரியவெப்பம், தூசி, மழையிலிருந்து பாதுகாக்கக்கூடியவும், சனங்கள் கண்களுக்கு மறைப்பாக இருக்கக்கூடியதுமான கூடாரம் அல்லது மேல் மறைப்பும், முன்னும் பின்னும் மறுப்புகளும் போடப்பெற்ற கரத்தை அல்லது வண்டிகளில் அல்லாமல் அல்லது மூடியுடைய பெட்டியினு மல்லாமல் ஒருவரும் கொண்டுபோகக் கூடாது, கொண்டுபோக உத்தரவுகொடுக்கக் கூடாது, கொண்டுபோகச் செய்யவுங் கூடாது. இன்னும் சுகாதார வைத்திய உத்தியோகஸ்தர் அப்படியான வண்டியையோ, கரத்தையையோ, பெட்டியையோ தக்கது என்று ஏற்றும் அப்படி அடையாளமிட்டு விடுமட்டும் இப்பிரமாணம் அனுசரிக்கப்பெற்றது என்று ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஓர் இடத்திலிருந்து இன்னுமோர் இடத்துக்குக் கொண்டுபோகும் போது ஒருவரும் பச்சையாயோ பாதிக்குப்பக்கம் பதனிடப்பட்டவோ தோலையோ தோல்களையோ வெளியரங்கமாய் காட்டவுங் கூடாது காட்டும்படி விடவுங் கூடாது.

---

1910 ம் ஆண்டின் நகரச்சங்கச் சட்டத்தின் 109 (1) ம் பிரிவின் நிருவாகமாக 1910 ம் ௵ ஆனி மாதம் 6 ந் தேதி விளம்பரிக்கப்பட்ட உபசட்டங்களின் 20 ம் அத்தியாயத்திலுள்ள 299 ம் பிரிவோடு கண்டி நகரச்சங்கம் இதன் அடியிற் காணும் அட்டவணையின் கீழ்வரைந்துள்ள உபசட்டங்களைச் சேர்த்துக்கொண்டிருப்பதாலும் அப்படிச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிற உபசட்டங்களைக் குறித்த சட்டத்தின் 109 (3) ம் பிரிவின் அமைப்புப்படி அதிகார மந்திரச்சபையோடு கூடிய தேசாதிபதி யவர்கள் ஸ்திரப்படுத்தியிருப்பதால் :

இத்தால் சகலரும் அறியவேண்டியது தேசாதிபதியாகிய நாங்கள் குறித்த சட்டத்தின் 109 (3) ம் பிரிவினுல் எங்கள்மீது பொறுப்பித்ததாயிருக்கும் தத்துவத்தின் முறைப்படி, இத்தால் அட்டவணையிற் காணும் சேர்க்கப்பட்ட உபசட்டங்களை விளம்பரம்பண்ணுகிறோம்.

எங்கள் ஆண்டவரின் வருடம் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்திரண்டாம் வருடம் செப்தெம்பர் மாதம் இருபத்தொன்பதாந் தேதியில் மேற்சொல்லிய இலங்கைத்தீவிலுள்ள கொளும்பிற் கொடுக்கப்பெற்றது.

உத்தமனுர் கட்டளைப்படி,
பி. ஹோர்ஸ்பரோ,
பிரதி கொலோனியல் சக்கிறுத்தார்.

ஆண்டவர் எங்கள் அரசரைக் காப்பாராக.

அட்டவணை.

கூட்டப்பட்ட உபசட்டங்கள்.

"பேக்கறி" கள் என்னும் பாண் போறணைகள் எலி போகக் கூடாமல் கட்டப்பட்டதா யிருக்கவேண்டும்.

299A. ஒவ்வொரு "பேக்கறி" என்று சொல்லப்படும் பாண் போறணையும் எலி உட்செல்லக்கூடாத வகையாய் நகரசங்க அக்கிராசனாதிபதி திருப்திகரம்பெறக் கட்டப்பட்டதா யிருக்கவேண்டியது.

மா வைக்க வேறு அறை.

299B. மா மாத்திரம் வைக்க ஒவ்வொரு பாண் போறணைக்கும் சேர்ந்ததாய் புறம்பாக ஓர் குறுக் காம்பறை இருக்கவேண்டியது.

மாப் பிசைகிறவர் துப்பரவாய் உடுத்திருக்க வேண்டியது.

299C. மாப்பிசையும் வேலைசெய்யும்போது அவ்வேலை செய்பவர் கழுத்திலிருந்து பாதம் மட்டும் மூடும் ஓர் சுத்தமான நீண்ட அங்கியை அல்லது "ஏப்பிறனை" தரித்திருப்பதோடு ஒரு துப்பரவான தொப்பியும் போட்டிருக்க வேண்டியது.

வேலையாட்களுக்கு தண்ணீர் தொட்டிகள் அல்லது தண்ணீர் கலசங்கள் ஆயத்தமாக்கி வைத்திருக்க வேண்டியது.

299D. உத்தரவு பெற்றிருக்கும் ஒவ்வொரு போறணைக்காரரும் தம் வேலைஆட்கள் பாவனைக்காக துப்பரவான தண்ணீர், "பேசின்" என்னப்படும் கலசங்கள் சவுக்காரம், நகம் சுத்தி செய்ய "பிறஸ்" என்னும் துடைப்பமும் அமைத்து வைத்திருக்க வேண்டியது.

---

## காணி விற்பனவுகள்.

No. 953, N. P.—1922 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 22 ந் திகதி, புதன்கிழமை காலை 11 மணிக்கு மன்னார்க் கச்சேரியில் தன் ஆபிசில் வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கு உதவிக் கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 32 காணித்துண்டுகள் வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கு மாந்தை முசலி மன்னார்ப் பகுதிகளிலிருக்கின்றது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காறனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| மன்னார்ப்பட்டண அழவு. பறங்கித்தெரு. குறிச்சி—பறங்கித்தெரு. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | |
| 82A | — | .. மிஸ்றர் ஏ. செல்லையா | .. வளவு | .. 0 0 3·73 | 2,000 |
| மாந்தை வடக்கு. பிளான் இலக்கம் 4,174. குறிச்சி—பாலைப்பெருமாள்கட்டு. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | |
| 1610 | பாலைப்பெருமாள்கட்டுக் கமம் | ரீ. அந்தோனியும் வீ. செபமாலையும் கூட்டிஅடைத்தது | நெல்லு .. | .. 0 0 34 | 26† |
| நானாட்டான் மேற்கு. பிளான் இலக்கம் 5,229. குறிச்சி—ஆத்திக்குளி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | |
| 1 | காட்டுக்காணி | .. டபிள்யு. பீ. பெரரா | .. நெல் வேளாண்மைக்கேற்ற பறட்டைக்காடு | 1 3 35 | 20† |
| பிளான் இலக்கம் 5,549. குறிச்சி—வங்காலை. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | |
| 1 | ஊத்தடிப்பூமி | .. வங்காலை அந்தோனி மனவல் சூசை கூட்டிஅடைத்தது | 2 வருஷத் தென்னம்பிள்ளைகளுள்ள தென்னந் தோட்டம் | 0 3 25 | 80 |
| முசலி வடக்கு. பிளான் இலக்கம் 5,539. குறிச்சி—பண்டாரவெளி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | |
| 1 | வெண்காணி | .. பி. செ. மீராமெய்யதீன், மன்னார் | நெல் வேளாண்மைக்கேற்றவெளியான காணி | 6 1 34 | 20 |
| 2 | ஷை | .. — | .. குளக்கட்டுக்காக விடப்பட்ட காணி | 0 1 21 | —* |
| 3 | ஷை | .. — | .. ஶ்ரோட்டுக்காக விடப்பட்ட காணி | 0 0 17 | —* |
| முசலி தெற்கு. பிளான் இலக்கம் 5,630. குறிச்சி—சிலாபத்துறை. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | |
| 1 | வெண்காணி | .. என். எம். முகைதீன்சாய்வு புதுவெளி | தென்னந் தோட்டத்துக்கேற்ற வெளியான காணி | 2 0 24 | 25 |
| பிளான் இலக்கம் 5,631. குறிச்சி—சிலாவத்துறை. உரித்தாளி—அசாட்சியார். | | | | | |
| 1 | வெண்காணி | .. வணக்கத்துக்குரிய, ஜே. பிறுன் சிஸ்சுவாமி | வீடுகட்டக்கூடிய வெளியான காணி | 5 1 20 | 25 |
| 2 | ஷை | .. — | றோட்டுக்காக விடப்பட்ட காணி | 0 1 23 | —* |
| நானாட்டான் கிழக்கு. Final Topo P. P. 8. குறிச்சி—பெரியமுறிப்புக்குளம். உரித்தாளி—அரசாட்சியார். | | | | | |
| 129[27] | பெரியமுறிப்பு காடு | — யார்க் பிறஞ்சி மரிசால் | .. வெளியான காணி | .. 0 2 0 | 25 |

பிளான் இலக்கம் 5,557. குறிச்சி—குண்டுமணிக்குளம். உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | குண்டுமணிக் குளத்துக் காணி | எம். வைத்தியாம்பிள்ளை .. | நெல்வேளாண்மைக்கேற்ற காடு | 2 0 1 | 17·50 |
| 2 | ஷை .. | — .. | குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 1 21 | —* |

விடத்தல்தீவு சுகாதாரச்சங்க எல்லைக்குள்.

பிளான் இலக்கம் 5,602. குறிச்சி—விடத்தல்தீவு. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | உப்புத்தரவை .. | கே. நெயினுமுகம்மது .. | பிட்டியும் பள்ளமுமான காணி | 1 0 12 | 20 |
| 3 | வடலியடிப்பிட்டி .. | — .. | வளிக்காக விடப்பட்டது | 0 0 5 | —* |
| 4 | ஷை .. | அடைக்கலமாதா கோவில் பார் வைகாரரினுல் கூட்டியடைக்கப்பட்டது | வெளியான காணி .. | 0 1 7 | 20 |

பெருங்களிப்பற்று.

பிளான் இலக்கம் 5,579. குறிச்சி—பிளுட்டுக்கண்டி. உரித்தாளி—அசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | கந்தர்வளவுக்காணி .. | ஏ. கந்தையா .. | மண்வீடுள்ள வெளியான காணி | 0 1 38 | 18·50 |

இலுப்பைக்கட.

பிளான் இலக்கம் 5,595. குறிச்சி—இலுப்பைக்கடவை. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | வண்ணுவளவுப்பிட்டி .. | ஏ. விஞசித்தம்பி .. | வெளியான காணி .. | 0 0 31 | 25 |

பிளான் இலக்கம் 5,530. குறிச்சி—சுண்டிக்குளம். உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | தலைவாசல்பிட்டி .. | கே. முருகேசு கூட்டியடைத்தது | தென்னந்தோட்டம் .. | 0 3 20 | 30 |
| 2 | முதலியான்கமம் .. | ஷை .. | நெல்வயல் .. | 0 0 15 | 20 |
| 3 | ஷை .. | கே. முருகேசு .. | காடு .. .. | 2 3 13 | 18·50 |
| 4 | ஷை .. | — .. | குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 0 9 | —* |
| 5 | ஷை .. | — .. | ஒழுங்கைக்காக விடப்பட்டது | 0 0 7 | —* |
| 6 | கந்தையாவளவு .. | கே. கந்தையா கூட்டியடைத்தது | தோட்டமும் வளவும் .. | 0 2 20 | 20 |
| 7 | பிரான்சிஸ்வளவு .. | எம். பிரான்சிஸ் கூட்டியடைத்தது | ஷை .. | 0 2 7 | 20 |
| 8 | முதலியான்கமம் .. | கே. முருகேசு .. | வெளியான காணி .. | 1 2 39 | 20 |
| 9 | ஷை .. | — .. | ஒழுங்கைக்காக விடப்பட்டது | 0 0 34 | —* |
| 10 | ஷை .. | — .. | குளக்கட்டுக்காக விடப்பட்டது | 0 3 0 | —* |
| 11 | கந்தையாவளவு .. | கே. கந்தையா கூட்டியடைத்தது | புகையிலைத்தோட்டம் .. | 0 0 12 | 20 |
| 12 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 12 | 20 |

பிளான் இலக்கம் 5,580. குறிச்சி—வெள்ளாங்குளம். உரித்தாளி—அசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | காட்டுக்காணி .. | பீ. கணபதிப்பிள்ளை .. | காடு .. | 1 3 33 | 17·50 |
| 2 | ஷை .. | — .. | ரோட்டுக்காக விடப்பட்டது | 0 1 10 | —* |

* விற்பனவுக்கல்ல.

† இத்துண்டுகள் நீர்ப்பாச்சக்கூடியவை. இக்காணிகளை வாங்குபவர்கள் ஏக்கர் ஒன்றுக்கு வருஷத்துக்கு ரூபா 2 வீதம் தண்ணீர் வரி கொடுக்கவேண்டும்.

இக்காணிகளைப்பற்றிய வேறு விபரங்கள் மன்னர் உதவிக் கவண்மேந்து ஏசன்றுத்துரையிடத்திலும் அளவுகாரப் பெரியதுரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1922 ம் ஹ ஐப்பசிமீ 4 ந வ.

பீ. ஹோஸ்பறே,
அக்றிங் கொலோனியல் சக்கிறுத்தார்.

---

**No. 954, N. P.**—1922 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகை மாதம் 22 ந் திகதி புதன்கிழமை வவுனியாவில் தன் ஆபிசில் வடமாகாணத்துக் முல்லைத்தீவு கவர்ணமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணிவிற்பனவைப் பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது நீந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 44 காணித்துண்டுகள், வடமாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக் வவுனியா தெற்குப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 5,103. குறிச்சி—வவுனியா. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | குருமன்காடு .. | வீ. மயில்வாகனம் .. | கட்டிடத்துக்கேற்ற காடு .. | 0 2 3·2 | 52* |
| 2 | ஷை .. | ஆற். ஆள்வாப்பிள்ளை .. | ஷை .. .. | 0 1 37·5 | 55·50* |
| 3 | ஷை .. | கறுப்பையா பெண் செல்லம்மா .. | ஷை .. .. | 0 1 38·3 | 55·50* |
| 4 | ஷை .. | எம். கே. முகையதீன் .. | ஷை .. .. | 0 1 39 | 55·50* |
| 5 | ஷை .. | எச். அப்துல்றகிமான் .. | ஷை .. .. | 0 1 38·8 | 55·50* |
| 6 | ஷை .. | கபீபு இஸ்மாயில் .. | ஷை .. .. | 0 1 38·8 | 55·50* |
| 7 | ஷை .. | — .. | பகிரங்க தேள்வைக்காகச் சேமிக்கப்பட்டது . | 0 2 16·3 | —† |
| 8 | ஷை .. | — .. | ஷை .. .. | 0 2 9·3 | —† |
| 9 | ஷை .. | சி. கந்தப்பு .. | கட்டிடத்துக்கேற்ற காடு .. | 0 1 38·5 | 55·50* |
| 10 | ஷை .. | கே. வீரகத்தி .. | ஷை .. .. | 0 1 39 | 55·50* |
| 11 | ஷை .. | மீராசாய்பு கைம்பெண் றகிமித்பேபி .. | ஷை .. .. | 0 1 38·8 | 55·50* |
| 12 | ஷை .. | முகம்மதுபிச்சை .. | ஷை .. .. | 0 1 38·4 | 55·50* |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 13 | குருமன்காடு .. | கே. மீராமெய்தீன் .. | கட்டிடத்துக்கேற்ற காடு .. | 0 1 39·1 | 55·50* |
| 14 | ஷை .. | ஏ. நூறுதீன் .. | ஷை .. .. | 0 2 3·3 | 55·50* |
| 15 | ஷை .. | என். கந்தசாமி .. | ஷை .. .. | 0 1 30·8 | 56* |
| 16 | ஷை .. | வே. சின்னத்தம்பி .. | ஷை .. .. | 0 1 37·1 | 55·50* |
| 17 | ஷை .. | வீ. கணபதிப்பிள்ளை .. | ஷை .. .. | 1 1 38·2 | 55·50* |
| 18 | ஷை .. | தி. நாகமணி .. | ஷை .. .. | 0 1 38·7 | 55·50* |
| 19 | ஷை .. | கே. சின்னர் .. | ஷை .. .. | 0 1 38·2 | 55·50* |
| 20 | ஷை .. | ஏ. முத்துவேலு .. | ஷை .. .. | 0 1 38·2 | 55·50 |
| 21 | ஷை .. | — .. | பகிரங்க தேள்வைக்காகச் சேமிக்கப்பட்டது | 0 2 1·3 | —† |
| 22 | ஷை .. | — .. | பாதைக்காகச் சேமிக்கப்பட்டது .. | 2 3 32 | —† |
| 23 | ஷை .. | — .. | ரோட்டுக்கநக விடப்பட்டது .. | 0 3 6·6 | —† |
| 24 | ஷை .. | — .. | புகைரதவீதிக்காகச் சேமிக்கப்பட்டது .. | 0 3 38 | —† |
| | | பிளான் இலக்கம் 5,114. குறிச்சி—வவுனியா. உரித்தாளி—முடி. | | | |
| 2 | ஆலேயடியில்வளவு .. | வீ. மனுவல்பிள்ளை .. | கட்டிடத்துக்கேற்றகாடு .. | 0 1 37 | 50 |
| 3 | இத்தியடியில்வளவு .. | எம். குசைப்பிள்ளை .. | ஷை .. | 0 2 0 | 50 |
| 4 | குருமன்காடு .. | — .. | பாதைக்காகச் சேமிக்கப்பட்டது .. | 0 1 12 | —† |
| | | பிளான் இலக்கம் 5,228. குறிச்சி—வவுனியவிளாங்குளம். உரித்தாளி—முடி. | | | |
| 1 | ஆத்தியடிவளவு .. | ஈ. கே. கதிரவேலு .. | கட்டிடத்துக்கேற்ற காடு .. | 0 2 6·7 | 53* |
| 2 | ஷை .. | — .. | ரோட்டுக்காக விடப்பட்டது .. | 0 0 17·1 | —† |
| | | பிளான் இலக்கம் 5,674, குறிச்சி—சாளம்பைக்குளம். உரித்தாளி—முடி. | | | |
| 1 | புளியடிக்கமம் .. | பீ. ஞானப்பிரகாசம் .. | காடு .. .. | 3 3 26 | 17·50* |
| | | பிளான் இலக்கம் 5,682. குறிச்சி—மதவுவைத்தகுளம். உரித்தாளி—முடி. | | | |
| 1 | பாலேயடிக்காடு .. | வீ. வேலுப்பிள்ளை .. | காடு .. .. | 4 0 12 | 16 |
| 2 | வீரையடிக்காடு .. | — .. | காடு .. .. .. | 7 0 28 | 16 |
| 3 | ஷை .. | — .. | காலடிப்பாதைக்காய் விடப்பட்டது .. | 0 2 7 | —† |
| 4 | ஒதியடிக்காடு .. | ஸீ. சின்னவிப்பிள்ளை .. | காடு .. .. | 1 2 37 | 17* |
| 5 | ஷை .. | — .. | அளவக்கைக்காக விடப்பட்டது .. | 0 1 9 | —† |
| 6 | ஷை .. | — .. | ரோட்டுக்காக விடப்பட்டது .. | 0 0 9 | —† |
| | | பிளான் இலக்கம் 5,683. குறிச்சி—சின்னச்சிப்பிக்குளம். உரித்தாளி—முடி. | | | |
| 1 | புளியடிக்கமம் .. | ஏ. அசனர் .. .. | காடு .. .. | 2 1 5 | 16 |
| 2 | பணையடிக்கமம் .. | உ. அல்லாப்பிச்சை அருகதனம் .. | நெல்வயல் .. | 0 0 23 | 32 |
| | | பிளான் இலக்கம் 5,703. குறிச்சி—இராசேந்திரங்குளம். உரித்தாளி—முடி. | | | |
| 1 | புளியடிக்கமம் .. | ஏ. முகம்மது இஸ்மாயில் .. | காடு .. | 2 0 9 | 16 |
| | | பிளான் இலக்கம் 5,716. குறிச்சி—புதூர். உரித்தாளி—முடி. | | | |
| 1 | புளியடிக்கமம் .. | கே. முகம்மது லெவ்வை .. | காடு .. .. | 5 3 32 | 16 |
| 2 | காம்பைக்காடு .. | கே. மீராசாய்பு .. | காடு .. .. | 0 2 16 | 16 |
| 4 | ஒதியடித்துண்டு .. | கே. மீராசாய்பு .. .. | காடு .. .. | 2 0 0 | 16 |
| 5 | புளியடிவளவு .. | ஏ. சேகுமுகம்மது .. | காடு .. | 1 0 0 | 16 |
| 6 | ஷை .. | — .. | குளக்கட்டுக்காக விடப்பட்டது .. | 0 2 28 | —† |

* மரத்து விலையையு மடக்கியிருக்கிறது. † விற்பனவுக்கல்ல.

இக்காணிகளைப்பற்றிய வேறு விபரங்களை முல்லைத்தீவு உதவி ஏசன்றுத்துரையிடத்திலும் படங்களைப்பற்றி சர்வேயர் ஜெனறலிடத்திலும் அறிந்து கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1922 ம் ஆண்டு ஐப்பசிீ 4 ௳ ௳.

பி. ஹோர்ஸ்பரோ,
அக்றிங் கொலோனியல் சக்கிறுத்தார்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தொடான்வலையில் அரசாட்சியாரின் புது பெண்பிளைப் பள்ளிக்கூடம் கட்டுவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 7,371. குறிச்சி—தொடான்வலை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கெப்பொத்தகும்புற .. | புல் நிலம் .. | தொடான்வலையிலுள்ள பல்வத்தகெதற பண்டார மெனிக்கவும், மற்றும் ஆட்களும் | 0 0 36·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ௵ ஒக்டோபர்மாசம் 31 ௳ தேதியிலன்று பிற்பகல் இரண்டு மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1922 ம் ௵ ஒக்ரோபர்மீ 6 ௳ ௳.

டபிள்யு. எல். கிண்டர்ஸ்லி,
மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## குத்தகை விளம்பரம்.

1917 ம் ஆண்டின் 45 ம் இல. கட்டளைச்சட்டத்தின் 69 (2) ம் பிரிவின் குளத்தெண்டப்பணத்துக்காக விற்கப்பட்டு கவண்மேந்தாரால் வாங்கப்பட்ட முல்லைத்தீவு டிஸ்திறிக் வவுனியா தெற்குப் பகுதியிலிருக்கும் பின்னுல் விபரிக்கப்படும் பதினொரு காணித்துண்டுகள் 1922 ம் ஆண்டு கார்த்திகைமீ 22 ௳ திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு முல்லைத்தீவு அரசாட்சி உதவி ஏசன்றுத்துரை யவர்களால் வவுனியாவில் தனது கந்தோரில் ஏலத்தில் விற்கப்படும்.

| கவண்மேந்தாரால் வாங்கப்பட்ட திகதி. | காணியின் விபரம். |
|---|---|
| 1896 ம் ஆண்டு ஆவணி மாதம் 11 ௳ திகதி | கிழக்கு மூலை வடக்கு பணிக்கநீராவி வாயுதா நொம்பர் 225 ல் காணும் பாலையடியில்வயல், விசாலம் விரைபூசல் நாலு. எல்லை : கிழக்கும் தெற்கும் வேலுப்பிள்ளை பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம் ; மேற்கு ரோட்டு ; வடக்கு மரிசுவேலி. இந்த நான்கெல்லைக்குட்பட்ட காணி யடங்கலும் |

| கவண்மேந்தாரால் வாங்கப்பட்ட திகதி. | காணியின் விபரம். |
|---|---|
| 1908 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16 ந் திகதி | கிழக்கு மூலை தெற்கு வேலங்குளம் பெரியவெளியிற்கமம் விசாலம் விரைபூசல் ஏழு; எல்லை: கிழக்கு-தா. உ. தம்புவின் ஆதனம்; தெற்கு-வீரசிங்கம் செல்லையாவின் ஆதனம் மேற்கு-காடு; வடக்கு-மனப்புலி கைம்பெண் மீனாட்சியின் ஆதனம். இந்த நான் கெல்லைக்குட்பட்ட காணியில் சொரியலாய் ஒரு பூசல்தறை. |
| 1911 ம் ஆண்டு பங்குனி மாதம் 7 ந் திகதி | நடுச்செட்டிகுளப்பகுதி தாண்டிக்குளம் பெரிய வெளியிற்கமம் விசாலம் விரைபூசல் ஒன்று; எல்லை: கிழக்கு-வைகாளி மகள் பாறுபதி; தெற்கு-குளக்கட்டுக்காக விடப்பட்ட நிலம்; மேற்கு-ஆற்றுக்கட்டு; வடக்கு-வேலன் அருணாசலத்தின் ஆதனம். இந்த நான் கெல்லைக்குட்பட்ட காணி யடங்கலும். |
| 1911 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9 ந் திகதி | கிழக்கு மூலை தெற்கு வேலங்குளம் கண்டியடியிற்கமம் விசாலம் விரைபூசல் ஏழு; எல்லை: கிழககும் தெற்கும்-முடிக்குரிய நிலம்; மேற்கு-தா. உ. தம்புவும் மறுவும்; வடக்கு-சின்னப்பிள்ளை கணபதிப்பிள்ளையுடைய ஆதனம். இந்த நான்கெல்லைக் குட்பட்ட காணி யடங்கலும். |
| 1912 ம் ஆண்டு சித்திரை மாதம் 18 ந் திகதி | கிழக்கு மூலை தெற்கு வேலங்குளம் கிணற்றடியிற்கமம் விசாலம் விரைபூசல் மூன்றரை எல்லை: கிழக்கு-மீனாட்சிக்குரிய ஆதனம்; தெற்கு-தா. உ. தம்புவுக்குரிய ஆதனம்; மேற்கு-தா. உ. நல்லதம்பிக்குரிய ஆதனம்; வடக்கு-முடிக்குரிய நிலம். இந்த நான் கெல்லைக்குட்பட்ட காணியில் தெற்குப்பக்கமாக அரைவாசி. |
| 1913 ம் ஆண்டு சித்திரை மாதம் 5 ந் திகதி | கிழக்கு மூலை தெற்கு வேலங்குளம் வாயுதா நொம்பர் 6 ல் காணும் கூழாவடியில்கமம் விசாலம் விரைபூசல் பத்து. எல்லை: வடக்கும் கிழக்கும்-தா. உ. தம்புவுக்குரிய ஆதனம்; மேற்கு-என். கணபதிப்பிள்ளையுடைய ஆதனம்; தெற்கு-முடிக்குரிய நிலம். இந்த நான் கெல்லைக்குட்பட்ட காணியடங்கலிலும் சொரியலாற இரண்டரைப்பூசல் விரைப்புத்தறை. |
| 1913 ம் ஆண்டு சித்திரை மாதம் 5 ந் திகதி | கிழகககு மூலை தெற்கு வேலங்குளம் வாயுதா நொம்பர் 3 ல் காணும் பரசடியில்கமம் விசாலம் விரைபூசல் மூன்றரை. எல்லை: தெற்கு-தா. உ. தம்புவின் ஆதனம்; கிழக்கு-தா. உ. நல்லதம்பிக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம்; மேற்கு-எஸ். அருணாசலத்துக்குரிய ஆதனம்; வடக்கு-மரிசு வேலி. இந்த நான்கெல்லைக்குட்பட்ட காணியடங்கலும். |
| 1913 ம் ஆண்டு சித்திரை மாதம் 5 ந் திகதி | கிழக்கு மூலை தெற்கு வேலங்குளம் வாயுதா நொம்பர் 8 ல் காணும் கிணற்றடியிற் கமம் விசாலம் விரைபூசல் மூன்றரை. எல்லை: கிழக்கும் தெற்கும்-மரிசுவேலி; மேற்கு-தா. உ. தம்புவுக்குரிய ஆதனம்; வடக்கு-எஸ். கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனம். இந்த நான் கெல்லைக்குட்பட்ட காணியடங்கலும். |
| 1913 ம் ஆண்டு சித்திரை மாதம் 5 ந் திகதி | கிழக்கு மூலை தெற்கு வேலங்குளம் வாயுதா நொம்பர் 6 ல் காணும் கிணற்றடியிற்கமம் விசாலம் விரைபூசல் பத்து. எல்லை: வடக்கும் கிழக்கும்-தா. உ. தம்புவுக்குரிய ஆதனம்; மேற்கு-முருகர் கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனம்; தெற்கு-முடிக்குரிய காடு. இந்த நான்கெல்லைக்குட்பட்ட காணியடங்கலிலும் சொரியலாய் அரைவாசி. |
| 1913 ம் ஆண்டு சித்திரை மாதம் 5 ந் திகதி | கிழக்கு மூலை தெற்கு வேலங்குளம் வாயுதா நொம்பர் 4 ல் காணும் கூழாவடியிற்கமம் விசாலம் விரைபூசல் ஏழு. எல்லை: வடக்கும் கிழக்கும்-மரிசுவேலி; தெற்கும் மேற்கும்-தா. உ. நல்லதம்பிக்குரிய ஆதனம். இந்த நான்கெல்லைக்குட்பட்ட காணியடங்கலும். |
| 1915 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 ந் திகதி | கிழக்கு மூலை வடக்கு பெரியமடு வேம்படியிற்கமம் விசாலம் விரைபூசல் ஆறு. எல்லை-கிழக்கு-மாப்பாணர் கைம்பெண் தெய்வானைக்குரிய ஆதனம்; தெரகு-சம்புநாதர் காத்தாருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்; மேற்கு-சேகரம்பிள்ளை கைம்பெண் சிதம்பரத்துக்குரிய ஆதனம்; வடக்கு-காடு. இந்த நான்கெல்லைச்குட்பட்ட காணியடங்கலும். |

முல்லைத்தீவு கச்சேரி,
1922 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 28 ம் உ.

ஜே. ஆர். வாள்றோ்ஸ்,
அரசாட்சி உதவி ஏசன்ற்.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 8,194, புத்தளம்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1922 ம் ஸ்ரீ (ஒக்ரோபர்) ஐப்பசிமீ 6 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எம். எம். வெடர்பேன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். எம். வெடர்பேன்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் புத்தளம் டிஸ்திறிக் தெமலகத்பற்றைச்சேர்ந்த குமாரப்பள்ளம்பற்றுக்கோறளையில் புளியன்குளம, யென்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க் குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

I.—இலங்கையளவைப் பிரதமபடம் 408.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 65A .. | பாற (ரேட்டு) .. .. .. .. | 0 0 1 |

எல்லைகளாவன: வடக்கு-ஓர் வண்டிப்பாதை; கிழக்கும் தெற்கும்-ஓர் வண்டிப்பாதை; மேற்கு-273,706 ம் உ. ப. ல் விவரிக்கப்படுங் காணி, முடியால் உரித்துப்பேசப்படும் புளியன்குளமவத்த.

II.—இலங்கை யளவைப் பிரதமபடம் 408.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 68A .. | பாற (ரேட்டு) .. .. .. .. | 0 0 1 |

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1245—1246 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உரித்துப்பேசப்படும் புளியன்குளமவத்தை; கிழக்கு-ஓர் வண்டிப்பாதை); தெற்கு-முடியால் உரித்துப்பேசப்படும் புளியன்குளமவத்த; மேற்கு-ஓர் வண்டிப்பாதை.

III.—இலஙகை யழவைப் பிரதமபடம் 408.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 70A | பாற (ரேட்டு) | 0 0 1 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உரித்துப்பேசப்படும் புளியன்குளமவத்த, ஓர் வண்டிப்பாதை; கிழக்கு-மினிக்குக்குலா கிராம யெல்லை; தெற்கு-பிங்கிறியைக்குப்போகும் வண்டிப்பாதை; மேற்கு-273,706 ம் உ. ப. ல் விபரிக்கப்படுங் காணி.

[புத்தளம் வி. உ. 18—1922.]

---

## காணி அளவையைப்பற்றிய அறிவித்தல்.

வடமத்திய மாகாணத்தில் முடிக்குரிய காணிகளை விலைக்குவாங்க அளப்பதற்குக் கேள்விப்பத்திரம் போடவேண்டிய பிரிவுகளின் விபரம்.

1. இத்தால் சகலரு மறியவேண்டியது முடிக்குரிய காணிகளை விலைக்கு வாங்குவோர் கேள்விப்பத்திரங்கள் பின்னுல் காட்டிய முறையே கவனிக்கப்படும்.

2. மாகாணம் இக்காரியத்தை நடத்த மூன்ருகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

முதலாம் பிரிவு.—குஞ்சுற்று, கல்பே, மகாப்பொற்ருனே, கன்டற, உட்டியான்குலமா கோறளைகள்.

இரண்டாம் பிரிவு.—உலகல்லை, காலகம், நேகம்பக, உண்டுறுவா, கிருலாவ, மாமினியா, மாதம்புவா கோறளையும், தமன்கடுவாவும் எகொடபற்றுக்களும்.

மூன்ரும் பிரிவு.—விலாச்சிய, நுவரகம், கடவற், எப்பவலவும் கென்டெக் கோறளைகளும்.

3. பிரிவு இலக்கம் 3. மூடப்படும் திகதி: 1922 ம் ஆண்டு நவம்பர்மாதம் 15 ௳ திகதி. இந்தப் பிரிவுகளுள் வரும் காணிகளுக்குக் கேள்விப்பத்திரங்களை மேற்சொல்லிய திகதிக்குள் அனுப்பவேண்டும். ஆனல் காணி விற்கிறதற்கு யாதும் தடை இருக்குமோ என்பதை அறிதற்கு கேள்விப்பத்திரங்களை அனுப்புவதை மேற்சொல்லிய திகதிக்குள் அனுப்ப வேண்டும். ஆனல் காணி விற்கிறதற்கு யாதும் தடை இருக்குமோ என்பதை அறிதற்கு கேள்விப்பத்திரங்களை அனுப்புவதை மேற்சொல்லியது தடைபண்ணமாட்டாது.

4. மூடப்படும் மற்றப் பிரிவின் இலக்கம் 1. அதற்கடுக்க மூடப்படும் பிரிவின் இலக்கம் 2. இந்த இரண்டு பிரிவுகளுக்குள் வரும் கேள்விப்பத்திரங்கள் சுறுக்கனுப்பவேண்டும்.

5. பிரிவு இலக்கம் 1. மூடப்படும் திகதி சில நாட்களில் பிரசித்தப்பண்ணப்படும். அந்தத் திகதியில் இலக்கம் 3 பிரிவில் இருக்கும் வேலைகள் முடிந்ததென்றடையாளமாயிருக்கும்.

ஜீ. எவ். ஆர். பிறவுனிங்,
கொவர்ணமேந்து ஏசன்று, வடமத்திய மாகாணம்.

1922 ம் ஆண்டு செப்றம்பர்மீ 27 ௳.

---

வடமேன் மாகாணத்தில் முடிக்குரிய காணிகளை வாங்க அல்லது குத்தகையாக வெடுக்கப்படும் கேள்விப்பத்திரங்களைப்பற்றி காணியளவு இதன்பிறகு இதன்கீழ் சொல்லப்படுமாறு ஒவ்வொரு பிரிவின்படிக்கு வெவ்வேருய் நடத்தப்படும்.

2. மாகாணத்தை இவ்விதமாய்ப் பிரிவுபண்ணப்பட்டிருக்கிறது :—

பிரிவு இலக்கம் 1 குருநாகல் டிஸ்திறிக்கைச்சேர்ந்த காணிகள்.

பிரிவு இலக்கம் 2 சலாபம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த காணிகள்.

பிரிவு இலக்கம் 3 புத்தளம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த காணிகள்.

3. 1922 ம் ஆண்டு கார்த்திகைமீ 1 ௳ திகதியிலிருந்து 2 ம் இலக்கங்கொண்ட பிரிவை மூடப்படும். அத்தேதியின் பிறகு இப்பிரிவுக்குட்பட்ட காணிகளைப்பற்றிக் கேள்விப்பத்திரங்கள் சற்வேயர் ஜெனறல் துரை யவர்களுக்கு அனுப்பப்படமாட்டாது. ஆனலும் இப்பிரிவுக்குட்பட்ட காணிகளிலேதும் விற்கிறதற்குத் தடையிருக்கிறதாவென்று அறியும் பொருட்டுக் கேள்விக்காரர்கள் பதிவுபண்ணிவைக்கும்படி கேள்விப்பத்திரங்கள் நமக்கனுப்பலாம்.

4. இதற்குப் பிறகு 3 ம் இலக்கங்கொண்ட பிரிவை மூடப்படும். இந்தப் பிரிவிலிருக்கும் முடிக்குரிய காணிகளைக் கேட்டுப் போடப்படும் கேள்விப்பத்திரங்களைக் கூடிய சீக்கிரத்தில் புத்தளம் உதவி ஏசண்டு துரை அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

5. 3 ம் பிரிவை மூடப்படுந் தேதியைச் சுறுக்கில் பிரசித்தப்படுத்துவோம். அத்தேதி 2 ம் பிரிவுக்குட்பட்ட எல்லா வேலைகளும் முடிவாகிய தேதிகளுக்குச் சமனுகும்.

புத்தளம் கச்சேரி,
1922 ம் ஆண்டு புரட்டாதிமீ 26 ௳.

ஜே. ஏ. முல்ஹோல்,
புத்தள, சலாப டிஸ்திறிக்குகளின் உதவி ஏசெண்டு துரை யவர்களுக்காக.

---

## லோக்கல் போட் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்.

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவுக்கமைந்த 1916 ம் ஆண்டின் 27 ம் இலக்கத்தின் கீழ்த் திருத்தப்பட்ட கட்டளைச்சட்டத்தின்படி ஆயத்தப்படுத்தப்பட்ட, சம்மதங்கொடுக்கத் தகுந்தவர்களினதும், தெரிவு செய்யப்படத் தகுந்தவர்களினதும் பெயர்களடங்கிய டாப்புகள், கேகாலை லோக்கல்போட் கந்தோரில், கந்தோர் வேலை நடக்கும் நேரங்களில், சோதனை செய்வதற்கு வெளியாய் வைக்கப்படுமென்றும், இதன்கீழ் கையொப்பம் வைப்பவர், சொல்லப்பட்ட டாப்புகளில் எப்பெயரையாவது கூட்டுவதற்கு கொண்டுவரும் எல்லா உரித்துகளையும், கூட்டப்பட்டவர்களுக்கு மாறுகக் கொண்டுவருந் தடைகளையும் விசாரிக்கும் நோக்கமாக 1922 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ௳ தேதி காலை 10 மணிக்கு சொல்லப்பட்ட கந்தோரில் சமுகமாயிருப்பாரென்றும், இத்தால் விளம்பரம்செய்யப்படுகின்றது.

கேகாலை,
1922 ம் ௵ ஐப்பசிமீ 2 ௳.

ஜீ. எஸ். உட்மன்,
உதவி அரசாட்சி ஏசண்டர், கேகாலை.

---

இதனுல் தெரிவிப்பது யாதெனில், கனம் இ. ஜீ. ஜொங்ளாஸ் துரையவர்களுடைய உத்தியோக காலம் முடிவாகிற படியால், மீதமான 1922 ம் வருஷத்துக்கும் 1923 ம் வருஷத்துக்கும் அவர்களுடைய ஸ்தானத்தில் கவர்ண்மெந்து உத்தியோகமில்லாத ஒருவரை மெம்பராகத் தெரிந்து கொள்ளவேண்டிய கூட்டம், 1922 ம் ஆண்டு அக்டுேபர்மாசம் 16 ௳ திகதி பகல் 10 மணிக்கு கம்பளை லோக்கல் போர்டு ஆபீசில் நடத்தப்படும்.

தெரிந்து எடுக்கப்படும் மெம்பர்களின் பேர் 1922 ம் ஆண்டு அக்டுேபர்மாசம் 6 ௳ திகதி வரையும் லோக்கல் போர்டு ஆபீசில் ஏற்றுக்கொள்ளப்படும்.

கண்டி கச்சேரி,
1922 ம் ௵ செப்றெம்பர்மீ 30 ௳.

டபிள்யு. எல். இன்டர்சிலி,
மத்தியமாகாணம் ஏஜன்று துரையவர்கள்.

---

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.